Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 100/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW5 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | டாக்டர் அழகப்பசாமி |
| Father's Name | – | முருகவேல் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10th May 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது வேட்டைக்காரன்புதூரில் உள்ள அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராகப் பணியாற்றி வருகிறேன். கடந்த 27.03.2017 ம் தேதி பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது இரவு 09.30 மணியளவில் சேரன் தொழிலாளர் காலனியைச் சேர்ந்த நித்தியானந்தம் என்பவரின் மனைவி லீலாதேவி என்பவர் தன்னை தனது கணவர் அடித்துக் காயப்படுத்தியதாகவும் கத்தியால் கையில் கீறிவிட்டதாகவும் உடம்பு வலிப்பதாகவும் சிகிச்சைக்காக வந்தவரை சிகிச்சைக்கு சேர்த்து மருத்துவ சிகிச்சை கொடுக்கப்பட்டது. மேற்படி நபர் வெளிநோயாளியாக சென்றுள்ளார். மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் குறித்து சொற்ப காயம் என சான்று வழங்கினேன். அந்த காயச் சான்றிதழ் **அசாஆ. 4** ஆகும். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்ட லீலாதேவி தனது சகோதரருடன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார். அவர் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றால் அவருக்கு வெளிநோயாளி சிகிச்சை எண் வழங்கப்படும் என்றால் சரிதான். காயச் சான்றிதழில் வெளிநோயாளி எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் சுயநினைவுடன் இருந்தார், அவர் கூறிய விபரங்களைதான் நான் காயச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவருக்கு சிறாய்ப்பு காயம்தான் ஏற்பட்டது ஆழமான குத்துக் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

லீலாதேவிக்கு கையில் ஏற்பட்ட காயம் தவிர உடம்பில் வேறு எங்கும் காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் அவர்களிடம் அசா.1 சிகிச்சை பெற்ற விபரங்களைப் பற்றி நான் கூறினேன். அவர் சிகிச்சை பெற்ற சரியான விபரங்களைதான் போலிசாரிடம் நான் கூறினேன். மேற்கண்ட நேரம் தவிர அவர் வேறு சமயத்தில் சிகிச்சை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் கால் தவறி கீழே விழும்போது கூர்மையான குச்சியோ அல்லது கல் மீதோ விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அவராகவே ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d. Tr.E.Pragasam.,B .A.,,B.L.,)

Judicial Magistrate No. II, Pollachi.